**தலைவர்/மண்டல இணைப்பதிவாளர்**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்**
**கரூர் மாவட்டம்**
**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம், மாவட்ட காவல் அலுவலகம்**
**பின்புறம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம்,**
**தாந்தோன்றிமலை, கரூர்- 639007**

விளம்பர எண். 01 / 2020 மாஆநி　　　　　　　　　　　　நாள்: 18.06.2020

கரூர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளுக்கு விற்பனையாளர் (Salesman) மற்றும் கட்டுநர் (Packer) தேர்வுக்கான விளம்பரம்.

1. கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் 22.07.2020 பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | நேரடி நியமன பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின்வகைகள் | காலிப்பணியிட எண்ணிக்கை விவரம். |
|---|---|---|---|---|
| 1. | நியாய விலைக்கடை விற்பனையாளர் (Salesman) | 1) தொகுப்பு ஊதியம் ரூ.5000/– நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2) ஓராண்டுக்குப்பின் ஊதிய விகிதம் ரூ.4300–12000 | 1.வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 05 |
| | | | 2. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம். | 46 |
| | | | **கூடுதல்** | 51 |
| 2 | நியாய விலைக்கடை கட்டுநர் (Packer) | 1) தொகுப்பு ஊதியம் ரூ.4250/– நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை<br>2)ஓராண்டுக்குப்பின் ஊதிய விகிதம்<br>ரூ. 3900–11000 | வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 02 |

மேற்படி காலிப்பணியிடங்கள் தோராயமானது மற்றும் மாறுதலுக்குட்பட்டது.

## 2. நிபந்தனைகள்:

(i) மேற்படி பதவிக்கான நேரடி நியமனத்தின்போது அரசு பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இடஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொது (GT) | பிற்படுத்தப் பட்டோர் (BC) | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) BC(M) | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் (சீர்மரபினர்) (MBC) | பட்டியல் இனம் (SC) | பட்டியல் இனம் (அருந்ததியர்) SC(A) | பழங்குடியினர் ST |
| நியாய விலைக் கடை விற்பனையாளர் | 51 | 15 | 14 | 2 | 10 | 7 | 2 | 1 |
| நியாய விலைக் கடை கட்டுநர் | 02 | – | 1 | – | 1 | – | – | – |

(ii) நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

(iii) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின் போதும் பின்பற்றப்படும்.

(iv) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல் முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். அதற்குப்பின் பெறப்படும் முறையீடுகள் எதுவும் ஏற்கப்படமாட்டாது.

(v) விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப்பிரிவை சார்ந்தவராக இருப்பினும் இதர வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.

(vi) **<u>உடற்தகுதி சான்றிதழ்</u>:**

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.**

## 3. <u>தகுதிகள்:</u>

அ) வயது (01.01.2020 அன்று)

(i) விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது) 01.01.2002 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்)

(ii) விண்ணப்பதாரர்கள் 01.01.2020 அன்று கீழ்க்காணும் வயது குறித்த தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

| வ.எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்த பட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| i) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழுங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 18வயது | வயது வரம்பு இல்லை |
| ii) | மிகவும் பிற்படுத்தப்ட்ட வகுபினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 18வயது | வயது வரம்பு இல்லை |
| iii) | மேற்படி வகுப்பினைச் சாராத இதர விண்ணப்பதாரர்கள் | 18வயது | 30 வயது |
| *முன்னாள் இாரணுவத்தினர், ஆதரவற்ற விதவை, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசாணைப்படி வயது வரம்பு விலக்களிக்கப்படும். | | | |

ஆ) **<u>கல்வித் தகுதி:</u>**

| **பணியிடம்** | **கல்வித்தகுதி** |
|---|---|
| நியாய விலைக்கடை விற்பனையாளர் | அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி (12 ஆம் வகுப்பு) அல்லது அதற்கு சமமான கல்வி தகுதி<br><br>(விளக்கம் – அங்கீகரிக்கப்பட்ட பள்ளி என்பது தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும்அல்லது தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்றது அல்லது மாநில கல்வி விதிகளின் கீழ் பள்ளி கல்வித் துறை இயக்குநரால் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டவை) |
| நியாய விலைக்கடை கட்டுநர் | அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு / பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி<br><br>(விளக்கம் – அங்கீகரிக்கப்பட்ட பள்ளி என்பது தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும்அல்லது தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்றது அல்லது மாநில கல்வி விதிகளின் கீழ் பள்ளி கல்வித் துறை இயக்குநரால் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டவை) |

4. **<u>தமிழ் மொழித் திறன்:</u>**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப் படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

5. **<u>தெரிவு முறை</u>: –**

மேற்படி காலிப்பணியிடங்கள், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவை நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இப்பணியிடத்திற்கான நபர்கள், நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில், வகுப்பு வாரி சுழற்சிக்கு உட்பட்டும், காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு கட்டாயமாக வருகை புரிய வேண்டும். **நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள்** மேற்படி பணியிடங்களுக்கு **தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள்.**

6. **<u>காலிப்பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்:-</u>**

விண்ணப்பதாரர்கள், தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக்கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை நேர்முகத் தேர்வின்போது தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் **விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு**

நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

7. **விண்ணப்பங்கள் விநியோகித்தல்:**

**கிடைக்குமிடங்கள்:–**

மேற்படி நியாயவிலைக்கடை பணி நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை கீழ்க்கண்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகளிலும், கூட்டுறவு நிறுவனங்களிலும், வேலை நாட்களில், வேலை நேரத்தில் கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

1) கரூர் மெயின் கிளை
2) வேலாயுதம்பாளையம் கிளை
3) சின்னதாராபுரம் கிளை
4) தரகம்பட்டி கிளை
5) தோகமலை கிளை
6) குளித்தலை கிளை
7) அரவக்குறிச்சி கிளை
8) சித்தலவாய் கிளை, (கிருஷ்ணராயபுரம்)
9) சுங்கசேட் கிளை, பசுபதிபாளையம், கரூர்
10) பள்ளப்பட்டி கிளை
11) வையாபுரிநகர் கிளை
12) புலியூர் கிளை
13) வெங்கமேடு கிளை
14) தாந்தோன்றிமலை கிளை
15) கரூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (அம்மா மருந்தகம் மாடியில்) ஜவஹர் பஜார், கரூர்
16) குளித்தலை வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பேருந்து நிலையம் அருகில், குளித்தலை
17) கரூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை,செங்குந்தபுரம் 2வது குறுக்குத் தெரு, கரூர்
18) உப்பிடமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்
19) பாலவிடுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்
20) க .பரமத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்
21) அரவக்குறிச்சி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

8. **விண்ணப்ப பதிவுக் கட்டணம்:-**

| பணியிடம் | விண்ணப்பக் கட்டணம் |
|---|---|
| நியாய விலைக்கடை விற்பனையாளர் | ரூ.150/- |
| நியாய விலைக்கடை கட்டுநர் | ரூ.100/- |

விண்ணப்பதாரர்கள் மேற்படி கட்டணத்தை திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள், கூட்டுறவு நகர வங்கிகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் **மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், (District Recruitment Bureau)** பெயரில் வரைவோலையாக கரூரில் மாற்றத்தக்க வகையில் **(Payable at Karur)** எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்ப படிவத்தின் எண் மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவற்றை வரைவோலையின் பின்புறத்தில் எழுதப்பட வேண்டும்.

**கட்டண விலக்கு**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் (SC &ST), அனைத்து வகுப்பினைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்து பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் மேற்கண்ட விண்ணப்ப கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

“ஆதரவற்ற விதவை” என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/– த்திற்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையை குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி/சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப்பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாக கருதப்படமாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாக கருதப்படமாட்டார்.

ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக்கட்டணம் எக்காரணம் கொண்டும், திருப்பி அளிக்கப்படமாட்டாது. வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**9. விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பவேண்டிய இணைப்புகள்:**

விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் சுயசான்றளிக்கப்பட்ட (Self attested) நகல்களை இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து

அனுப்பக்கூடாது. நேர்முகத் தேர்வின்போது சுயசான்றளிக்கப்பட்ட சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை அசல் சான்றிதழ்களுடன் சரிபார்த்த பின்னரே நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

10. <u>நேர்முகத்தேர்வு:-</u>

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள், தங்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்த விவரம் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு விண்ணப்பதாரர்கள்அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளாதவர்கள் எக்காரணம் கொண்டும் தெரிவுக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள். மேலும், நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் நியமனத்திற்கு உரிமை கோர தகுதியுடையவராகமாட்டார்.

11. <u>தடையில்லா சான்றிதழ்:</u>

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும் பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லா சான்றிதழினை நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

12. இதர நிபந்தனைகள்

1) நேர்முகத்தேர்வில் கலந்துகொண்டு விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாக பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் உடனடியாக ரத்து செய்யப்படும்.
2) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையினை ரத்து செய்வதற்கு/திரும்ப பெறுவதற்கு/ திருத்துவதற்கு மற்றும் கெடு தேதியினை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு முழு உரிமை உண்டு.

13. <u>பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்:-</u>

அ) விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(i) விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் கருப்பு அல்லது நீல நிற பந்து முனை பேனா **(Ball Point Pen)** கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(iii) விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக்கட்டணத்திற்கான வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும் (கட்டண விலக்கு கோருபவர்களை தவிர). விண்ணப்ப எண், பதவியின் பெயர், மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவற்றை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பதாரர் அவரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்தில் ஒட்டுவதுடன் தனியாக ஒரு புகைப்படத்தினை புகைப்படத்தின் பின்புறம் விண்ணப்பதாரரின் பெயர், விண்ணப்ப எண் ஆகியவற்றை எழுதி இணைக்க வேண்டும். **மேலும் சுய முகவரியிட்ட ரூபாய் 22/—க்கான தபால் வில்லை ஒட்டிய 24 X 10 செ.மீ <u>உறையினையும்</u>** விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **நேரிலோ அல்லது தபால்** மூலமோ தலைவர்/மண்டல இணைப்பதிவாளர், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம், மாவட்ட காவல் அலுவலகம் பின்புறம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், தாந்தோன்றிமலை, கரூர்- 639 007 என்ற முகவரிக்கு **22.07.2020 ஆம் தேதி மாலை 5.45**

**மணிக்கு முன்னர்** கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். அஞ்சல் தாமதம் போன்ற காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 22.07.2020 அன்று மாலை 5.45 மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்படாமலும், பரிசீலனைக்கு உட்படுத்தப்படாமலும் நிராகரிக்கப்படும்.

**உதவி மையம் தொடர்பு தொலைபேசி எண் – 04324 296545**

தலைவர்/ மண்டல இணைப்பதிவாளர்,
மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,
கரூர்.